1987 மார்ச் 4] [திரு. எஸ். டேனியல்ராஜ்]

அதோடு என்னுடைய தொகுதியில் வல்லநாட்டிலிருந்து புதுக்கோட்டை வரை விவசாயிகள் எல்லாம் மழையை மட்டும் நம்பியே பயிர் செய்கிற அவசியம் இருந்து வருகிறது. அவர்களெல்லாம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே வருகிற ஆண்டுகளிலாவது இதுபோன்ற நிலைமைகள் ஏற்படாமல் இருக்க கங்கை கொண்டான் அருகில் இருக்கிற பராக்கிரமபாண்டிய குளத்திலிருந்து ஓழக்குடிகுளம் வரை இடையே இருக்கிற சிற்றாறு, சீவலப்பேரி குளம், கலியாவூர் பெரிய குளம் இவைகளின் வழியாக ஓழக்குடிகுளத்துக்கு வாய்க்கால் வெட்டி தண்ணீரை கொண்டு போக வேண்டும். அப்படிச் செய்தால் வல்லநாட்டிலிருந்து புதுக்கோட்டை வரை இருக்கிற புனைக் குளங்களுக்கு தடை இல்லாமல் தண்ணீர் பாயும். அதனால் ஒரு போக விளைச்சலுக்கும் வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு உதவித் தொகையைத் தமிழக முதல்வர் ரூ. 150-லிருந்து ரூ. 250 ஆக உயர்த்தியிருப்பதைப் பாராட்டுவதோடு மத்திய அரசு அவர்களுக்கு இலவச ரெயில் பாஸ் வழங்கியுள்ளதைப்போல் இந்தத் தியாகிகளுக்கு இலவச பஸ் பாஸ் மற்றும் இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கவும் வசதி செய்து தர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்து ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படுகிற சலுகையைப் போலவே கிறுத்துவ ஆதிதிராவிட மக்களுக்கும் அச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டு அதற்குரிய சட்டத்தையும் திருத்த வேண்டும் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. ஆர். செங்காளியப்பன் : சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கவர்னர் அவர்களுடைய உரையின் மீது நான் ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். இந்தச் சட்டமன்றத்திலே உள்ள அங்கத்தினர்கள் அத்தனை பேருமே வறட்சியை முதலிடமாகக் கொண்டுதான் இங்கே உரையாற்றினார்கள்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர்கள் திருவாளர்கள் இரா. தாமரைக்கனி மற்றும் கா. வே. கந்தசாமி ஆகியோர் இடம்மாறி அமர்ந்திருப்பது குறித்து.

திரு. ப. தீர்த்தராமன் : Sir, on a point of order அவையில் சில மெம்பர்கள் இடம் மாறி உட்கார்ந்திருக்கிறார்கள். அது பற்றி எங்களுக்கு எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லையே என்பதால் அதைப் பற்றி தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு அறிவிப்பு கொடுக்க வேண்டிய தேவையில்லை.

திரு. ப. தீர்த்தராமன் : அவைக்குச் சொல்லவில்லையே என்றுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தாமரைக்கனி, திரு. கே. வி. கந்தசாமி ஆகிய இரண்டு பேரையும் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையிலும், கட்சியின் நிறுவனர் என்ற முறையிலும் எனக்கு ஓர் அறிவிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டக் காரணத்தால் அங்கே உட்கார்ந்திருக்கிறார்கள்.

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் —தொடர்ச்சி.

திரு. ஆர். செங்காளியப்பன் : கோவை மாவட்டத்திலே கடந்த இரண்டு ஆண்டுக் காலமாகவே கடுமையான வறட்சி நிலவுவதால் கிராம மக்கள் குடி தண்ணீருக்கு கூட வசதியில்லாத நிலையில் கஷ்டப்படுகிற நிலை இருப்பதைப் பார்க்கிறோம். இந்த நிலையில் தமிழக அரசாங்கமானது பல இடங்களில் ஆழ்துளை கிணறுகளைப் போட்டு ஓரளவிற்கு குடி தண்ணீர் செய்து கொடுத்திருந்தாலும், இந்த நீர் மட்டமானது நாளுக்கு நாள் கீழே போய்க் கொண்டிருப்பதால் தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்படுவதை நாம் பார்க்கிறோம். இதே போன்று பல பஞ்சாயத்துக்களில் குடி தண்ணீர் எடுப்பதற்கு இருக்கக் கூடிய மோட்டார்களுக்கு ஆகும் கரெண்ட் சார்ஜ்கூட கட்ட முடியாத நிலையில் பொருளாதார நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட கிராமங்களில் குடி தண்ணீர் வசதி ஏற்படுத்தித் தர அங்கேயுள்ள பஞ்சாயத்துகளுக்கு உதவக்கூடிய முறையில் தமிழக அரசு அதிகப்படியாக உதவி அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று வறட்சியின் காரணமாக ஆங்காங்கேயுள்ள குளங்கள், குட்டைகள் ஆகியவற்றில் தண்ணீர் வறண்டு போயிருக்கிற நிலையில், நிலத்தடி நீர் கீழே போகிற நிலையில், விவசாயக் கூலிகள் வேலையில்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை பார்க்கிறோம். அந்த விவசாயக் கூலிகளைக் கொண்டு குட்டைகள் குளங்கள் ஆகியவற்றை தூர் எடுப்பதன் காரணமாக, மழைக் காலத்திலே குடி தண்ணீர் கிடைக்க ஏற்பாடும் செய்ய முடியும், வறுமையின் காரணமாக வறட்சியில் இருக்கக் கூடிய கூலி தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே போல விவசாயிகளும் பெரிதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விளைபொருள் விளைச்சல் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில், அவர்களுடைய கடன்களை வஜா செய்ய